## இயல் 6.9 - பின்னங்கள்

பயிற்சி எண் :: 6.9.1.4.J

பின்னங்கள் - கலப்பு பின்னங்கள் - பயிற்சி

## பின்னங்கள் - கலப்பு பின்னங்கள் - பயிற்சி

கார்மேகம் ஒரு கட்டிட ஒப்பந்தக்காரர். அவர் கட்டிக்கொண்டிருக்கும் 9 அடுக்கு மாடிக் கட்டிடத்தின் உபயோகத்திற்காக 150 மீட்டர் நீளமுடைய 12 எஃகு கம்பிகள் வாங்கினார். ஒவ்வொரு அடுக்கு மாடியும் $3\frac{3}{4}$ மீட்டர் உயரம் உடையது. அடுக்கு மாடியின் உயரத்திற்கு ஏற்ப வாங்கிய கம்பிகளை வெட்டவேண்டும். அவ்வாறு வெட்டினால் எத்தனை கம்பித்துண்டுகள் அவருக்குக் கிடைக்கும்?

### விடைகாணும் படிகள்

1. தேவைப்படும் ஒவ்வொரு கம்பித்துண்டின் நீளமும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.
2. அதன் அளவை வத்துக்கொண்டு, வாங்கிய 12, 150 மீட்டர் கம்பிகளில், ஒரு கம்பியில் எத்தனை கம்பித்துண்டு கிடைக்கும் என கண்டுபிடிக்க வேண்டும்.
3. அந்த எண்ணிலிருந்து வாங்கிய 12 கம்பிகளிலிருந்து மொத்தம் எத்தனை கம்பித்துண்டுகள் கிடைக்கும் என கணக்கிட வேண்டும். அதுவே விடையாகும்.

| விவரம் | கணக்கிடல் |
|---|---|
| தேவைப்படும் கம்பித்துண்டின் நீளம் | $3\frac{3}{4} = \frac{15}{4}$ மீட்டர் |
| ஒரு 150 மீட்டர் கம்பியிலிருந்து நமக்குக் கிடைக்கும் கம்பித்துண்டுகளின் எண்ணிக்கை | $150 \div \frac{15}{4} = \frac{150}{1} \times \frac{4}{15} = \frac{\cancel{150}^{10}}{1} \times \frac{4}{\cancel{15}} = \frac{40}{1} = 40$ |
| எனில் மொத்தம் 12 கம்பிகளிலிருந்து கிடைக்கும் கம்பித்துண்டுகளின் எண்ணிக்கை | $40 \times 12 = 480$ |

150 மீட்டர் நீளமுள்ள, 12 கம்பிகளிலிருந்து $3\frac{3}{4}$ மீட்டர் நீளமுள்ள **480** கம்பித்துண்டுகள் கிடைக்கும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 15th February, 2022 :: 18:28 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**